## தமிழ் இனத்தை - மொழியை - சமூக நீதியைக் காத்திட

# முதல்வர் தலைமையில் அணிவகுத்துப் போராடத் தயார்!

## முதல்வர் பிறந்தநாளையொட்டி - சென்னை தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் காங்கிரஸ் மூத்த தலைவர் பீட்டர் அல்போன்ஸ் பேச்சு!

**சென்னை, மார்ச் 8-**

**“தமிழ் இனத்தை மொழியை, சமூக நீதியைக் காத்திட முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அணிவகுத்துப் போராட தயார்” என்று காங்கிரஸ் மூத்த தலைவர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சென்னை தெற்கு மாவட்டக் கழக விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் வேளச்சேரியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசும்போது கூறினார்.**

**சென்னை தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் மாவட்டச் செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா.சுப்பிர மணியன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் அணியின் மாவட்ட அமைப்பாளர் வேளச்சேரி வே.ஆனந்தம் தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

இந்த மேடையில் நான் நிற்பது அருமைக்குரிய அண்ணன் நேரு அவர்கள் சொன்னார்கள், “காங்கிரஸ் கட்சியில் இருந்தாலும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் கலைஞருக்கும் மிக நெருக்கமானவர்” என்று சொன்னார். வாழ்க்கையில் மிகவும் பெருமையாகவே ஏற்றுக் கொள்கிறேன்.

ஆனால், நாங்கள் எல்லோரும் 1969இல் கலைஞர் அவர்களை நெஞ்சுக்கு நேராக எதிர்த்து அரசியல் களத்திற்கு வந்தவர்கள். திராவிடமுன்னேற்றக்கழகத்தைஒருமுழுமையான கொள்கை எதிரியாக பார்த்து, அதற்கு நேராக அரசியல் களமாடி, பொதுமக்களை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு எதிராக திரட்டுகின்ற பணியை காங்கிரஸ் கட்சியின் பிரச்சார பேச்சாளராக தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் பேசி வந்தவன் நான்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் கையைப் பிடித்து அரசியலுக்கு வந்தேன். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் மறைவிற்குப் பிறகு, மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்களுடைய நிழலில், அன்னை இந்திரா காந்தியைப் பார்த்து - ராஜீவ் காந்தியைப் பார்த்து சோனியா காந்தியைப் பார்த்து ராகுல் காந்தியைப் பார்த்து, மாநிலங்களவையில் உறுப்பினராகி சட்டமன்றத்தில் மூன்று முறை உறுப்பினராகி ஐக்கிய நாடுகள் சபை வரை பேசி, இன்று இந்தியாவின் அரசியலை 55 ஆண்டுகளாக பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு பெரிய அனுபவத்தை நான் இறைவன் அருளால் பெற்றிருக்கிறேன்.

இன்று ஒரு வளையம் வந்திருக்கிறோம். கலைஞர் அவர்களுடைய அரசியல் நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் எங்களுக்கு எப்போது வந்தது?

### ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய பாடம்!

1975-இல் அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டபோது, அதற்கு எதிராக களமாடிய கலைஞர், அன்னை இந்திரா காந்தியின் அன்றைய ஆட்சியை அகற்றுவதில், அகில இந்தியாவையும் அணி திரட்டிய மிகப் பெரிய பணியை செய்த கலைஞர் அவர்கள், ஒரு காலகட்டத்தில் தன்னுடைய நிலைப்பாட்டை மாற்றி, அவரே வாய் திறந்து அழைக்கிறார் எந்த இந்திரா காந்தியை எதிர்த்து களமாடினாரோ எந்த அன்னை இந்திரா காந்தி அம்மையார் கொண்டு வந்த அவசர நிலை பிரகடனத்தை எதிர்த்து தமிழகத்தில் அரசியல் களம் கண்டாரோ ஜனநாயகத்தை காப்பாற்றுவதற்காக நான் இந்திரா காந்தியை எதிர்த்து போராடுகிறேன் என்று போர்க்குரல் கொடுத்தாரோ அதே கலைஞர் அவர்கள் மீண்டும் வந்து வாய் நிறைய அழைக்கிறார், “நேருவின் மகளே வருக... நிலையான ஆட்சி தருக...” என்று அழைக்கிறார். ஒரு தலைமை எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு கலைஞருடைய நிலைப்பாடு என்பது வரலாற்றில் ஒவ்வொரு அரசியல் மாணவனும் படிக்க வேண்டிய பாடம்.

### எந்தத் தனி நபரையும் விரோதம் கொள்பவர் அல்ல கலைஞர்!

ஒரு தலைவருக்கு தனிப்பட்ட விருப்பு, வெறுப்பு அல்ல... ஒரு தலைவன் தனி மனித வெறுப்பின் மீது வளர்வது அல்ல... ஒரு மனிதனுக்கு இருக்கும் ஒரே சிந்தனை, இந்த நாடு இந்த சமூகம் ஜனநாயகம் சமூகநீதி மாநில உரிமை இந்தியாவில் எதிர்காலம் தமிழகத்தின் நல்வாழ்வு அது மட்டும்தானே தவிர, எந்த தனி நபரைப் பற்றியும் விரோதம் கொண்டாடும் மனப்பான்மையை தலைவர் கலைஞர் அவர்கள் தன் நெஞ்சில் வளர்த்துக் கொள்ளவில்லை என்பதுதான் இந்த இந்திரா காந்தியை வருக... வருக... என்ற வரவேற்றதில் அவருக்கு இருந்தது மிகப்பெரியது.

அவ்வாறு கொடுத்த வரவேற்பை அன்னை இந்திரா காந்தி எவ்வாறு புரிந்து கொள்கிறார் என்றால், எந்த கலைஞருடைய ஆட்சி கலைத்தாரோ எந்த கலைஞருடைய ஆட்சியை கலைப்பதற்காக கையெழுத்திட்டாரோ அவர் பார்த்து சொல்கிறார், “நான் கலைஞரை மதிக்கிறேன். கலைஞர் போன்று ஒரு உறுதியான மனிதரை நான் பார்த்ததில்லை. அவர் எதிர்த்தாலும் உறுதியாக எதிர்ப்பார்; ஆதரித்தாலும் உறுதியாக ஆதரிப்பார்.” என்கிறார். அன்னை இந்திரா காந்திக்கும் தனிப்பட்ட விருப்பு, வெறுப்பு இல்லை. இரண்டு தலைவர்களும் தங்களுக்கு நேர்ந்த தனிப்பட்ட இழப்புகளை பற்றி கவலைப்படுவதில்லை.

ஒரு சம்பவம் சொல்கிறேன் நண்பர்களே... அன்னை இந்திரா காந்தி அவர்கள் தேர்தல் முடிந்து, தேர்தலில் தோற்று, தன்னுடைய அரசியல் களத்தில் மிகப்பெரிய சரிவை சந்தித்து விட்டு தமிழ்நாட்டிலுள்ள திருநள்ளாறு வருகிறார். அவருக்கு யாரோ சொல்கிறார்கள், ‘திருநள்ளாரில் சென்று ஆன்ம அமைதிக்காக ஒரு வேண்டுதலை செய்துவிட்டு வாருங்கள்’ என்று சொல்கிறார். அந்த வேண்டுதலுக்காக வருகிறார். அந்த வேண்டுதலுக்காக அன்னை இந்திரா காந்தி அவர்கள் வருகிறபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நண்பர்கள் அவருக்குகருப்புகொடிபோராட்டம்அறிவிக்கிறார்கள்.



மறுநாள் காலையில் கலைஞர் திருச்சிக்கு வருகிறார். நம்முடைய சி.பி.எம். கட்சியைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரங்கராஜன் அவர்கள் விவசாய தொழிலாளர்களுக்காக போராடுகின்ற அவர், தலைவர் கலைஞர் அவர்களை காலையில் சங்கம் ஹோட்டலில் சந்திக்கிறார். தலைவர் கலைஞர் அவர்கள் ரங்கராஜனிடம் கேட்கிறார், “இந்திரா காந்தி வருகிறாரே... இவர்கள் கருப்புக் கொடி காட்டுகிறார்களே... அதைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்” என்று கேட்கிறார். ரங்கராஜனுக்கு என்ன பதில் சொல்லுவது என்று தெரியவில்லை. கருப்புக் கொடி காட்ட அறிவித்திருப்பது திராவிட முன்னேற் றக் கழகம். அதைப் பற்றி என்ன நினைக்கி றாய் என்று தன்னிடம் கேட்பது தலைவர் கலைஞர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர். அதை ஆதரிப்பதா? வேண்டாம் என்று சொல்வதா என்று அவருக்கு ஒரு மன குழப்பம். அவர் சற்று தயங்குகிறார்...

### மிகப்பெரிய பண்பாடு கொண்டவர்!

உடனே தலைவர் கலைஞர் சொல்கிறார், “அனாச்சாரம் அய்யா... அந்த அம்மாவிற்கு மனதில் எவ்வளவு வேதனை எவ்வளவு வழி... அதையெல்லாம் போக்குவதற்காக ஒரு ஆன்மீகத் தேடுதலுக்கு வருகிறார். அதில் சென்று கருப்புக் கொடி காட்ட வேண்டிய அவசியம் என்ன? அது ஒரு அனாச்சாரம்” என்று சொல்லி அந்தப் போராட்டத்தை வாபஸ் வாங்க சொல்கிறார். தலைவர் கலைஞருக்கு கடவுள் நம்பிக்கை கிடையாது. சனீஸ்வர பகவான் மேல் நம்பிக்கை கிடையாது. ஆனால், உலகம் முழுவதும் போற்றும் ஒரு தலைவி, ஒரு தேர்தலில் சறுக்கி, ஒரு மிகப்பெரிய தோல்வியைப் பெற்று, அந்த மன வேதனையில் தன்னுடைய மன வேதனைக்கு மருந்திட ஒரு ஆன்மீகத் தேடுதலுக்கு வருகிறபோது, அதை அரசியல் ஆக்கக் கூடாது என்ற அந்த மிகப்பெரிய பண்பாடு உள்ள தலைவர் கலைஞர் அவர்கள் என்பதையெல்லாம் நாளாக... நாளாக உணர்கிறோம்.

மாநில சுயாட்சி கேட்கின்ற போது, தேசத்தை பிரிக்க போகிறார் என்று சொன்னேன். தேசப்பிரிவினைக்காக குரல் கொடுக் கிற அந்த சூழ்நிலை என்று சொன்னோம். இன்று மாநில சுயாட்சி எவ்வளவு முக்கியம் என்பதை உணர்கிறோம். மாநில சுயாட்சி பற்றி தலைவர் கலைஞர் அவர்கள் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றுகின்றபோது ராஜமன்னார் கமிஷனின் அறிக்கையைப் பெற்று, அதற்கான கருத்தரங்குகளை நடத்துகின்ற போது மாநில சுயாட்சிக்காக அவர் நடத்திய போராட்டத்தின்போது எங்களைப் போன்றவர்கள் மேடை போட்டு நாடகம்கூட பேசி இருக்கிறோம். மாநில சுயாட்சி என்கிற தீர்மானம் இந்தியாவைப் பிரிப்பதற்கான ஒரு முயற்சி. இந்திய ஒற்றுமையை குழைப்பதற்காக செய்யப்பட்டு இருக்கின்ற ஒரு ஏற்பாடு என்றெல்லாம் பேசியிருக்கிறோம். ஆனால், இன்று மாநில சுயாட்சியின் அவசியத்தை தெரிந்து கொள்கிறோம்.

### அகில இந்திய அளவில் ஒலிக்கும் குரல்!

1965-இல் இந்தி மொழி எதிர்ப்பு போராட்டம் நடத்துகின்றபோது காங்கிரஸ் கட்சியின் ஆட்சி இங்கு நடந்தேபோது - இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் நியாய, அநியாயங்களைப் பற்றி விளக்கப் பொதுக் கூட்டங்கள் நடந்தபோது, இந்தப் போராட்டத்திற்கு எதிர்ப்பான கருத்துக்களை கொண்டிருந்தவர்கள்தான் நாங்கள். ஆனால், இன்று காலச்சக்கரம் 50 ஆண்டுகள் சுழன்றிருக்கிறது. இந்திய ஜனநாயகம் அரை நூற்றாண்டைக் கடந்து வந்திருக்கிறது. இந்த தேசத்தை தமிழகத்தை வழிகாட்டிய மாபெரும் தலைவர்கள், தமிழ்ச் சமுதாயத்தை செதுக்குவதற்காக தங்கள் தேக்கு மர தேகத்தை பலியாக்கிய ஒப்பற்ற தலைவர்கள் எல்லாம் மறைந்து விட்ட வேளையில், இன் றைக்கு தமிழகத்திற்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடி தமிழகத்திற்கு ஏற்பட்டிரு க்கின்ற எதிர்கால சிக்கல் தமிழகத்திற்கு இருப்புக்கே வந்திருக்கின்ற கேள்விக்குறியை பாதுகாப்பதற்கு யார் இருக்கிறார்கள் என்கிற கேள்வி எழுகின்றபோது, என் அருமை நண்பர்களே... இன்று எதற்காக இந்த மேடையில் நாங்கள் வந்து நிற்கிறோம் என்றால், இது தேசத்தின் ஜனநாயகத்திற்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடி இந்த தேசத்தின் சமூக நீதிக்கான நெருக்கடி இந்த தேசத்தின் மதச்சார்பின்மைக்கான நெருக்கடி இவற்றையெல்லாம் ஓங்கி ஒரு குரல் கொடுத்து கேட்பதற்கான குரல் தென் மாநிலத்திலிருந்து தமிழகத்திலிருந்து திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவரின் குரலாக அந்தக் குரல் அகில இந்திய அளவில் ஒலிப்பதன் காரணமாகத்தான் இன்று அவரைப் பாராட்ட வேண்டிய கடமை இருக்கிறது.

72 வயதில் பிறந்தநாள் என்று சொன்னால் ஆயுஸ் ஹோமம் வளர்ப்பார்கள். இன்னும் 50 ஆண்டுகள் வாழ வேண்டும் என்று நினைப்பார்கள். மக்கள் மருமக்கள் பேரக்குழந்தைகளோடு 72 ஆண்டுகளை திரும்பப் பார்த்து, வாழ்ந்து முடிந்த மகிழ்ச்சியோடு சாதித்த சாதனைகள் தான் பெற்ற இன்பங்கள் வளர்ச்சிகள் பெருமைகள் என்று எண்ணி இறுமாப்பெய்தி அந்த மகிழ்ச்சியில் பல பேர் அமர்ந்திருக்கின்ற வேளையில், இந்த 72 வயது இளைஞர் சொல்லுகிறார், “மாணவனாக உழைத்தேன், இளைஞனாக உழைத்தேன், துணை முதலமைச்சராக உழைத்தேன், மேயராக உழைத்தேன், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக உழைத்தேன், முதலமைச்சராக உழைத்தேன்; என் வாழ்க்கை முழுவதும் உழைத்துக் கொண்டே இருப்பேன்” என்று சொல்லுகின்ற அந்த ஓங்கார கூச்சலை கேட்டோம்.

ஒவ்வொரு தலைவரும் ஒரு பிறந்தநாள் செய்தியை சொல்லுகிறார்கள்? இந்த பிறந்தநாள் செய்தியாக முதலமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்? இன்று தமிழகத்திற்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடிக்கு தன்னுடைய விளக்கம் கொடுக்கும் சூழ்நிலையில், இதை தேசம் முழுவதும் ஒரு அணியாக திரட்டும் ஒப்பற்ற அறைக்கூவலை விட்டிருக்கும் முதலமைச்சர்தான், நம்முடைய முதலமைச்சர்.

### அத்தனை கட்சிகளையும் அழிக்க நினைக்கும் பா.ஜ.க.!

2026-ஆம் ஆண்டு நீங்கள் பா.ஜ.க.வை ஒரு சராசரி அரசியல் கட்சியாக நினைத்து விடக் கூடாது. ஆர்.எஸ்.எஸ்.உம், பா.ஜ.க.வும் ஏதோ தமிழகத்தில் இருக்கும் மற்ற அரசியல் கட்சிகளைப் போல் அல்ல.

> **இ**ன்றைக்கு தமிழகத்திற்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடி தமிழகத்திற்கு ஏற்பட்டிருக்கின்ற எதிர்கால சிக்கல் தமிழகத்திற்கு இருப்புக்கே வந்திருக்கின்ற கேள்விக்குறியை பாதுகாப்பதற்கு யார் இருக்கிறார்கள் என்கிற கேள்வி எழுகின்றபோது, என் அருமை நண்பர்களே... இன்று எதற்காக இந்த மேடையில் நாங்கள் வந்து நிற்கிறோம் என்றால், இது தேசத்தின் ஜனநாயகத்திற்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடி இந்த தேசத்தின் சமூக நீதிக்கான நெருக்கடி இந்த தேசத்தின் மதச்சார்பின்மைக்கான நெருக்கடி இவற்றையெல்லாம் ஓங்கி ஒரு குரல் கொடுத்து கேட்பதற்கான குரல் தென் மாநிலத்திலிருந்து தமிழகத்திலிருந்து திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவரின் குரலாக அந்தக் குரல் அகில இந்திய அளவில் ஒலிப்பதன் காரணமாகத்தான் இன்று அவரைப் பாராட்ட வேண்டிய கடமை இருக்கிறது.

1967-இல் காங்கிரஸ் கட்சி தன்னுடைய அதிகாரத்தை தமிழ்நாட்டில் இழந்தது. அதற்குப் பிறகு மத்தியில் பலமுறை காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தோடு உறவு வைத்திருக்கிறோம்; அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடு உறவு வைத்திருக்கிறோம்; இந்த இரண்டு கட்சிகளோடும் உறவு வேண்டாம் என்று தனித்தும் நின்றிக்கிறோம். ஆனால், என்றைக்கும் ஒரு நாள்கூட இந்த நாட்டில் இருக்கும் அத்தனை அரசியல் கட்சிகளையும் அழித்துவிட வேண்டும் என்று நினைக்கவில்லை. ஆனால், பா.ஜ.க.வும் ஆர்.எஸ்.எஸ்.சும் என்ன நினைக்கிறது என்றால், இந்தியாவில் பா.ஜ.க.வை தவிர, வேறு அரசியல் கட்சியே இருக்கக் கூடாது என்கிற நினைப்போடு செயல்படும்கட்சி, இந்தபா.ஜ.க.கட்சி.

என் அருமை நண்பர்களே... 2026 சட்டமன்ற தேர்தல், சாதாரண சட்டமன்றத் தேர்தல் அல்ல. திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களுக்கு நான் சொல்வேன், என்றைக்காவது எந்த கட்சியின் தலைவராவது, காங்கிரஸ் இல்லாத பாரதத்தை உருவாக்குவோம் என்று சவால் விட்டிருக்கிறார்களா? கம்யூனிஸ்ட்களை இல்லாத இந்தியாவை உருவாக்குவோம் என்று சவால் விட்டிருக்கிறார்களா? கழகங்களே இல்லாத தமிழ்நாட்டை உருவாக்குவோம் என்று சபதம் இட்டிருக்கிறார்களா? ஆனால், காங்கிரஸ் இல்லாத ஒரு நாட்டை கம்யூனிஸ்ட்கள் இல்லாத ஒரு நாட்டை கழகங்கள் இல்லாத ஒரு நாட்டை உருவாக்கி தீர்வோம். அதுவும் எப்படி? இந்த அரசியல் சாசனச்சட்டம்மூலம். புதிதாக அரசியல் சாசனச் சட்டம் தேவையில்லை. புதிதாக எந்த முயற்சியும் தேவையில்லை. இன்றைக்கு இருக்கும் அரசியல் சாசன சட்டத்தின்சரத்துகளை வைத்தே, எங்களால் தமிழ்நாட்டை ஒழிக்க முடியும் தமிழ்நாட்டின் நிர்வாகத்தை சீர்குலைக்க முடியும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் செயல்பட விடாமல் தடுக்க முடியும்.

### நிதியைக் கொடுக்க மாட்டோம் என்று எந்தப் பிரதமராவது சொல்லியிருக்கிறார்களா?

65 ஆண்டுகள், 70 ஆண்டுகள், 75 ஆண்டுகள் நாடாளுமன்றம் நடந்திருக்கிறது; பட்ஜெட் போட்டிருக்கிறோம்; மாநிலங்களுக்கு நிதி கொடுத்திருக்கிறோம்; பல மாநில அரசுகள் எதிர்த்திருக்கிறார்கள். என்றைக்காவது? எந்த பிரதமராவது? நேருவாக இருக்கட்டும் மொரார்ஜி தேசாயாக இருக்கட்டும் இந்திரா காந்தியாக இருக்கட்டும் அதற்குப் பின்னால் வந்த நரசிம்ம ராவ், மன்மோகன்சிங், அடல் பிஹாரி வாஜ்பாய் உட்பட யாராவது ஒரு பிரதமர் ஒரு அமைச்சர் மாநிலங்களுக்கு கொடுக்கும் நிதியை நாங்கள் கொடுக்க மாட்டோம். இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால்தான் கொடுப்போம் என்று சொல்லி இருக்கிறார்களா?

இன்று முதலமைச்சர் வேதனைப்பட்டு பேசியிருக்கிறார். பள்ளிக் கல்விக்கு தர வேண்டிய 2,100 கோடி வரவில்லை என்பது ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் சிறுகதை அல்ல. நாளைக்கே உயர்நிலை கல்விக்கு பணம் தர மாட்டேன் என்கிற அறிவிப்பு வர இருக்கிறது என்பதை சுட்டிக் காட்டுகிறார்.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு முன்னெடுக்கிற ஒவ்வொரு திட்டத்திற்கும் இன்றைக்கு எவ்வளவு பெரிய இடைஞ்சல்.... அதைத்தான் அருமையாகச் சொன்னார் நம்முடைய நேரு அண்ணன் அவர்கள்.

கலைஞர் அவர்களுக்கும் தளபதி அவர்களுக்கும் என்ன வேறுபாடு? கலைஞர் அவர்கள் களத்தின் முதலமைச்சராக இருக்கின்றபோது தலைவராக இருக்கின்றபோது அவர் சந்தித்த எதிரிகள் வேறு. அவர்கள் கொள்கை எதிரிகள். தலைவர் கலைஞர் அவர்கள், அன்னை இந்திரா காந்தியோடு களமாடினார்; பெருந்தலைவர் காமராஜரோடு களமாடினார்; அடல்பிஹாரி வாஜ்பாயோடு களமாடினார்; எம்.ஜி.ஆர்.உடன் களமாடினார். ஆனால், இன்றைக்கு தளபதி யாரோடு களமாடுகிறார் என்றால், அமித்ஷாவோடும் மோடியோடும் களமாடுகிறார்.

### வேதனைப்படும் சூழ்நிலை!

அரசியல் சாசனச் சட்டத்தை காலில் போட்டு மிதித்து, அரசியல் சாசனச் சட்டம் உருவாக்கிய அத்தனை நிறுவனங்களை யும் செயல்பட விடாமல் தடுத்து,அதுநீதிமன்றமா? நீதிமன்றம் நான் சொன்னதைத்தான் கேட்கும்; அது பாராளுமன்றமா? நான் சொன்னால்தான் நடப்பது பாராளுமன்றம்; இந்த நாட்டில் ஆளுநர், நான் சொன்னதைத்தான் செய்வார் ஆளுநர்; இந்த நாட்டில், சட்டம் ஆட்சி அரசியல்-மரபுகள் பண்பாடுகள் என்று எதுவும் இல்லாமல், ஒரு மதயானை பாத்திரக்கடைக்குள் புகுந்ததைப்போல, இந்திய தேசம் பெற்ற சுதந்திரத்தை - ஜனநாயகத்தை, சீரழித்து - சின்னாபின்னப்படுத்தி, இந்த நாட்டில் எதற்காக நாமெல்லாம் ஒன்றிணைந்தோம் என்று வேதனைப்படும் அளவிற்கு, இன்றைக்கு சிறுபான்மை மக்களை, நான் சொல்வது மதச்சிறுபான்மை அல்ல; இந்தியாவில் இருக்கும் இந்தி பேசாத மக்கள் அத்தனை பேரையும், ஏன் இந்த நாட்டில் இணைந்தோம் என்கிற கேள்வி கேட்கும் அளவிற்கு வேதனைப்படும் ஒரு சூழ்நிலை உருவாகி இருக்கிறது.

### வடக்கே ராகுல் காந்தி தெற்கே தளபதி!

என் அருமை நண்பர்களே... இந்த காலகட்டத்தில் நம்மை பாதுகாக்கும் ஒரு பெரிய குரல் வடக்கே ஒரு குரல், ஒரே ஒரு குரல்தான்; தெற்கே ஒரு குரல், ஒரே ஒரு குரல்தான்; வடக்கே தலைவர் ராகுல் காந்தி பேசுகிறார்; தெற்கே தளபதி பேசுகிறார்;

அதனால்தான்என்னஅருமையான பிறந்தநாள் செய்தி...‘மை டியர் பிரதர்...’ என்றுதான் ஆரம்பிக்கிறார். இந்த தேசத்தின் அதிகாரத்துறைத்தனத்தை எதிர்த்து அரசியல் சாசனச் சட்டத்திற்கு எதிரான சதிகளை எதிர்த்து மாநில உரிமைகளுக்கு எதிரான முன்னெடுப்புகளை எதிர்த்து சமூக நீதிக்கு எதிரான நடவடிக்கைகளை எதிர்த்து உங்களோடு கரம் குவித்து போராடுவதற்கு தயாராக இருக்கிறோம். உங்களுக்கு அந்தப் போராட்டத்திற்கான சக்தியை ஊக்கத்தை இறைவன் தர வேண்டும் என்று மன்றாடுகின்றஅந்தகுறலின்பிரதிபலிப்பாகதான் இந்த மேடையில் நின்று நான் தளபதியை வாழ்த்துகிறேன்.

சமூக நீதி பாதுகாக்கப்பட வேண்டும்; ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும்; ஜனநாயக நிறுவனங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்; இந்தத் தேசத்தில் ஒரு பெரும்பான்மை நினைக்கின்ற எண்ணத்தை, தேசம் முழுவதும் அது எவ்வளவு பெரிய கொடுமையாக இருந்தாலும் நிறைவேற்றமுடியும் என்ற சூழ்நிலை வந்தால், 7 கோடி தமிழர்களின் நிலைமை என்ன ஆகும். கலைஞர் சொல்லுகிறார், “நாங்கள் என்ன காலனி மாநிலமா?” என்று கேட்கிறார்.

### வரி கொடுக்கும் மாநிலமாக மட்டும் இருக்க வேண்டுமா?

வரி கொடுப்பதற்கான மாநிலமாகதான் நாங்கள் இருக்க வேண்டுமா? நீ போட்ட வரி, வரி விதிக்கின்ற உரிமையைக்கூட அவிழ்த்து விட்டாய்... அரை வேட்டி கூட இல்லை. மாநில முதலமைச்சர்கள் பிச்சை எடுத்து அரசு நிர்வாகத்தை நடத்தும் நகராட்சி நிர்வாகங்களாக மாற்றிக் கொண்டிருக்கிறாய்... அப்படிப்பட்ட சூழ்நிலையில், கட்டுகின்ற வரிப்பணத்திற்கு உரிமை கோருகின்ற அந்த உரிமையை கேட்கின்ற ஒரு முதலமைச்சர் இன்றைக்கு இந்தியாவில் யாரும் இல்லை.

### மோடி - அமித்ஷா கூட்டுக் களவாணித்தனம்!

என் அருமை நண்பர்களே... இதற்காகத்தான், இந்த பிறந்தநாள் விழாவில் நாம் வாழ்த்துகிறோம். இன்றைக்கு, தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்தியாவில் எந்த மாநிலத்தில் தேடினாலும் இதைப் போன்ற ஒரு அதிகார துறைத்தனத்தை அமித்ஷா-மோடியின் இந்தக் கூட்டு களவாணித்தனத்தை எதிர்க்கும் தைரியமும் ஆண்மையும் உள்ள ஒரு மாநிலக் கட்சியின் தலைவராக தளபதி அவர்களைத் தவிர, வேறு யாரையும் பார்க்க முடியாது.

நேற்று வரைக்கும் எடப்பாடி என்ன என்னமோ பேசினார். நான் இந்தத் தேர்தலிலும் கூட்டணி இல்லை; வரும் எந்தத் தேர்தலிலும் பா.ஜ.க.வோடு ஒரு கூட்டணி இல்லை என்றெல்லாம் பேசியவர், இன்று அப்படியே பிளேட்டை மாற்றிப் போடுகிறார். கூட்டணியை பற்றி இப்போது முடிவு செய்ய மாட்டேன் என்கிறார். எனக்கு ஒரே எதிரி திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்று சொல்கிறார்.

என் அருமை நண்பர்களே... இவர்களெல்லாம் மண்குதிரைகள். இந்த மண் குதிரைகளை நம்பி, இந்தத் தமிழகம் பயணிக்க முடியாது. யாரை நம்பி பயணிக்க முடியும்? ஆட்சி இழந்தாலும் பரவாயில்லை அதிகாரத்தை இழந்தாலும் பரவாயில்லை தமிழ் மொழிக்கு ஏற்படும் இழுக்கை நான் ஏற்கமாட்டேன். பதவியைத் துறக்க தயாராக இருக்கிறேன் என்று எழுந்து நிற்கின்ற தளபதியைப் போன்றவர்களின் பின்னால் அணிவகுப்பதன்மூலமாகத்தான், இந்த இனத்தை காக்க முடியும்; இந்த மாநிலத்தை காக்க முடியும்; இந்த மொழியை காக்க முடியும்; நாம் போராடிப் பெற்ற சுயமரியாதை நாம் பெற்றிருக்கும் சமூக நீதி நாம் பெற்றிருக்கும் உரிமைகள் தமிழர்களுக்கு கிடைத்திருக்கும் பொருளாதார முன்னேற்றம் தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கும் நல்வாழ்வு, இது தொடர்கதையாக தொடர வேண்டும் என்றால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நூறாண்டு, நூறாண்டு வாழ வேண்டும்; உடல் நலத்தோடு வாழ வேண்டும்; உள்ளத்தில் பூரிப்போடு வாழ வேண்டும்; துடிப்போடும், எழுச்சியோடும் வாழ வேண்டும்;

### நாட்டின் ஜனநாயகத்தைப் பற்றிக் கவலைப்படும் தலைவர்கள்!

அதற்காக திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமல்ல நண்பர்களே, சில நேரங்களில் சில தலைவர்கள் தங்களை கட்சிகளைத் தாண்டியும் அங்கீகாரம் பெறுகிறார்கள். அவ்வாறு அங்கீகாரம் பெறுகின்றபோதுதான், ஒரு தலைவரின் பூரணத்துவம் முழுமையாகிறது. ஒரு கட்சிக்கு மட்டுமே தலைவராக தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு, அதற்கு மட்டுமே தன்னுடைய வாழ்க்கையையும், உழைப்பையும் செலவழிக்கும் தலைவனாக இல்லாமல், ஒட்டுமொத்த தமிழகத்தின் எதிர்காலத்தை மட்டுமல்ல - ஏன், இந்தியாவின் ஜனநாயகத்தின் எதிர்காலத்தையும் சேர்த்து கவலைப்படும் ஒரு தலைவர் ஒரு கட்சிக்கு மட்டுமே தலைவர் என்றால், நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். அவர் தமிழ்நாட்டின் அங்கீகாரம்பெற்ற தலைவர். அதற்காகத்தான் அவருடைய கூட்டணிக் கட்சிகள் அவருக்கு பின்னால் அணிவகுத்து நிற்கிறோம். இந்தக் கூட்டணி வெற்றி பெற வேண்டும் என்று நினைக்கிறோம்.

எதற்காக வாழ்த்து சொல்லுகிறோம். முதலமைச்சராக இருப்பதற்காக அல்ல; அவர் கையில் அதிகாரம் இருக்கிறது என்பதற்காக அல்ல. அவர் கையில் கொள்கை இருக்கிறது என்பதால்; அந்தக் கொள்கையைக் காப்பதற்கான துணிவு இருக்கிறது என்பதால்; அந்தன் கொள்கைக்கு சேதம் வந்தால், எந்த இழப்பையும் சந்திக்கத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லும் ஆண்மை இருக்கின்ற காரணத்தினால்தான், அந்த கூட்டணிக்கு தலைவணங்க தயாராக இருக்கிறோம்; அவரோடு இருக்கிறோம்; அவரை ஆதரிக்கிறோம்; அந்தக் கூட்டணி வெற்றி பெற வேண்டும் என்று மனமார நினைக்கிறோம்; அந்த வெற்றி என்பது, ஒரு அரசியல் கட்சியின் வெற்றி அல்ல; ஒரு தனி மனிதனின் வெற்றி அல்ல; தமிழ் இனத்தின் வெற்றி என்று சொல்லி விடைபெறுகிறேன்.

இவ்வாறு பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசினார்.